4317.

உ

# சாற்றுகவிகள்.

காஞ்சீபுரம்

## ஸ்ரீமத் நிச்சல-இராமானந்த சுவாமிகள்

இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

சீர்பூத்த சான்றோர்வாழ் தொண்டைநன் னாட்டகத்தே யுறுங்கச்சிச்
செழுமை கொண்டிங்
கோபூத்த ஸ்வகீயானந் தக்குருவா முனிவரனை
னிணையி லாத
தார்பூத்த மலரடிகள் சிரத்தேந்திச் சுகாதீத
தனமை பூண்ட
போபூத்த மோனசுகப் பெருவாழ்வை யாவருமே
பெற்று வாழ;

சீராருந் ததவோப தேசவெண் பாவென்றுந்
திமிலொன் றீந்து
பாராரு மன்பதை பவசாக ரங்கடக்கப்
பண்ணி னானல்
ஏராரு மாமணிமங் கலத்திருவேங் கடத்தானென
றியற்பேர் வாய்ந்தோ
னோரான வள்ளலுக்கிந் நீணிலத்தோர் கைம்மாறென்
னிகழ்த்து மாறே.

ஸ்ரீமத் சதாசிவப்பிரம்மயோகீந்திரர் மாணாக்கர்

## ஸ்ரீமான், தே. சுப்பராயமுதலியாரவர்கள்

இயற்றியது.

திருமகண் மலைமகள் கலைமக டிகழும்
மருவுதா லத்தின் மாமிசை தோன்றிப்
பவப்பிணி யிரிய பாச மகலத்
தவப்பெரு வடிவந் தானே யுதித்து
ஐம்புலக் காட்சி யறவே விடுத்து
வம்புசெய் மும்மல வாதனை யகல
வறிவடி வாகி யகண்டபூ ரணமாய்
செறிதரு ஞானச் செல்வமுந் தேர்ந்து
நித்தியகை வல்ய நெறியினை யோர்ந்து
சச்சிதா னந்தத் தன்மையுந் தெளிந்து
சதாநிட்ட ராகச் சந்ததம் விளங்கிடு
மூங்கயப்ப தேசிகர் முன்னடி பணிந்து
வினியசற் குரவ னெழிலுற வுணர்த்துந்
தத்துவ மசியின் றன்மையுந் தேர்ந்து
அத்துவி தத்தி னநுபவ மோர்ந்து
நனவிற் சுழுத்தி நடுநிலை யுணர்ந்து

எனவிற் சகமெனக காட்சியிற் கணடு
வேதாந்த நூலின் விரிவெலா மோர்ந்து
போதாந்த மென்னும் புணரி படீஇ
அவாமுத லத்துவா வாறையு நீங்கிச்
சுவாநு பவத்திற் சுகமுறத் தோய்ந்து
ஆரூட நிலையி லன்புட னமர்ந்து
தேறித் தெளீஇயிச் சிதாகாச மாகி
மூலமா மாயை முழுதறக் களைந்து
கால மகன்று கருத்தினுட் டோங்கு
திரிபுடி நீக்கித் திசமேக ரசமாய
நில்லாத் திருந்து மெழில்வள் ளுவாபோ
லெல்லற நடத்து நாயக னைதும்
உத்தம சுகாந்திவ னுலகோ ருய்யப்
பற்றுமும் மலமாம் பாசம கிரியத்
தன்னரு பூகியைத் தரணியோ ரடைய
ஓருரு மணிமங் கலப்பதி யுத்தமன்
ஆதர வாந்திரு வேங்கட வண்ணல்
[illegible] வோட தேச வெண்பா வெனும்பே
ருத்தம விலக்கணத் தொருநூ லியற்றிச்
சாதன முடையோர் சார்ந்தினி துய்ய
வாதர வாக வளித்தன னதனைச்
சாதுக டம்மொடு சந்ததம் பழகி

யோதரு ஞானநூ லுண்மை யுணர்ந்து
நித்திய திருத்தி நேமமாக் கொண்டு
சத்தியந் தவறாத் தன்மையி னிலைத்து
அழுக்கா றவாவொடு யாவையு மெல்லை
விழுக்கென நீக்கி யிகந்தனி னிலகு
மெச்சிடுஞ் சென்னை நியாயத் தலபதி
யுச்சித மாயுய ரிராஜரத் தினவேள்
இளமையி லிருவரு மினிமையிற் பயின்ற
வளமைசேர் நேயம் வளர்தர வென்றே
அச்சி னியற்றி யாவரு மகிழ
நிச்சய நேய நிலைபெறுத் தினனே.

---

## இந்நூலாசிரியர் - தஞ்சிறுகானட்பின் மாட்சிமை வியந்துரை சாத்து.

*அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்*

சீர்பெருகு சென்னைநகர்ச் சிந்தாத்ரி பேட்டைதனிற் சிறப்புற்றோங்கும், பேர்பெருகும் வேளாணற் குலமணியா ம்ராஜரத்தி னப்பேர் பெற்றோ, னேர்பெருகும் பிள்ளைவய திலென்ற னோடொன்றாய்ப் பயிலப் பெற்றோன், பார்பெருகு பிரெஸிடென்ஸீ ஞாயதன்ட னைக்கதிபன் பட்டம் பெற்றோன்.

கற்புறுநன் மனையறத்திற் கற்புடையா டனைத்தழீஇக் காத லொன்றிப், பொற்புறுநல் வளமெனைத்தும் பொலிய விக பரமிரண்டும் போதப் பெற்றோன், றற்பதத்தின் பரோக்ஷாப ரோக்ஷாநு பூதியிலை தம்முட் பெற்றீண், டற்புதமா வெஃநூலை யச்சேற்றி கீணிலத்தி லிசைபெற் றனே.

சாக்ருதகவிகள் முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# தத்துவோபதேசவெண்பா.

## காப்பு

நேரிசை வெண்பா.

பொன்னிற்பணிபோற் பொலிந்தருளின் மன்னுமே
மென்னினுப் லக்கணையா னெய்துமாற்-றன்னு [லர்
மரிசிவனுங் கௌரியரு ளானைமுகன் கந்தன்
வரிசைபெற விந்நூலின் வாழ்த்து.

## நூல்

உபோற்காதம்.

சீர்மருவு ஞானத் திருவாளர் செவ்விதனைப்
பேர்மருவு மாயைப் பிணிப்புற்றோர்-பார்மருவு
மேட்டைப் படித்த விருமாப்பா னென்னறிவார்
நாட்டம் படியாதார் நட்பு. (க)

சிவசிவவென் றங்கஞ் சிலிர்சிலிர்த்துச் சொல்வீர்
சிவமெதுவோ சிந்தைதனிற் றேரீர்-சிவமென்னல்

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

சொல்லும் பொருளுமற்றுச் சும்மாவிருக்குநிலை
நல்லோர்பாற் கேட்டுணர்மி னன்கு. (உ)

ஆறாறு நீற்றங் கதன்மே லுறுசிவத்தைப்
பேறாகப் பேணிப் பிணக்கறு-தாறாகச்
சுற்றித் திரிந்து சுகமிழப்ப தையகோ
வெற்றுக்கிங் கென்னு மிதில். (௩)

போராகப் பேசாத பெற்றித்தா மற்றதனை
யோராம லுள்ளத் துருகாமற்-பாரி
லுடலகமாய் நின்றே யுறுமவதி காணுந்
திடமிலரோ காண்பார் சிவம். (௪)

உடன்முதலாந் தத்துவங்களொவ்வொன்றா நேதித்
திடமருவும் பாழை யெதிர்ந்து-மடமை
யிதசத் துருவை யிகந்தா லெதிரிற்
சிதம்பரமே யன்றோ சிவம், (௫)

சிதம்பரத்தை யன்றிச் சிவமெனல்வே றுண்டோ
சிதம்பரத்தை யன்றிச் சிவமும்-இதம்பெறவே
மேனியில்வெண் ணீற்றின் மினுக்கின் மெணமெ
நீனியிலென் னுண்டோ தெளி. [ணப்பிற்

அதிகாரிக் கேற்ப வுரையு மறைக
ளதிகார மற்றோர்பா லாமோ-சதிகாரர்
சாலப் படித்துந் தரமறியார் பாலனுகி
யேலற் பொருட்டா மிது. (௭)

சிதம்பரமே யீசன் சிதம்பரமே சிவன்
சிதம்பரமே சத்திசிவந் தேரீர்-சிதம்பரமே
வேதாவுங் கௌரி கணேசனொடு விண்டுவுமே
வேதாந்தத் துச்சி விதி. (௮)

வானுஞ் சிதம்பரமிவ் வையஞ் சிதம்பரநீ
நானுஞ் சிதம்பரமா னாடுங்காற்-றீனர்
படித்தென்பலவாப் பகர்முகத்திற் பேச்சு
விடுத்தாலன் றோகாணும் வீடு (௯)

[தார்
பேய்பிடித்தாற் போலவென்றும் பேச்சிற் சலியா
வாய்வெடிப்பா லேதிங்கு வாய்க்குமே-தாய்பிடித்த
மர்க்கடத்தைப் போல மனந மிகப்பெருக்கி
னர்க்கனைப்போ லாவீ ரகம். (௰)

தேகநானென் றிருப்பிற் செய்கருமப் போக்குறுமோ
தேகநா னென்றே திரிதருவீர்-தேகமிதை

நானென்ப தில்லை நடுவா முணர்வென்னிற்
றானாற் பேச்சுண்டோ தான். (௧௧)

ஆகவழி வாள ரலைவதுபோ லாயிடினீ
ரேகவழி வாகியிடர் தீர்வதென்றோ -சோகமெனுஞ்
சொல்வழியிற் சோர்வுறுவீர் சொல்லறியீர் சொல்
லெல்லையறி வீரோ விடர்க்கு. [லளவி

ஆகவீறி வாலிங் கடர்த்துத் தருக்கிடுநீ
ரோகவழி வாளரென லேச்சன்றோ-சாகாமற்
கற்பதன்றோ கல்விக் கழகாநீர் கற்பவெலாஞ்
சொற்பனம்போ லாமே தொலைந்து. (௧௩)

புத்தகமும் பூசை புகல்சமயத் தீக்கையுள
வெத்தனையு மென்னு மியமனுறிற்-சுத்த
சிவமெது வென்றுன்னிச் சிந்தைதெளிந் தன்றோ
சிவமாதல் சைவத் திறம். (௧௪)

மூவர்தே வார முடிவிறிரு வாசகமுந்
தேவர்திருவாய்மொழியுந் தேர்ந்துய்ம்மின்-ஓவாம
னீரிற் குழைத்த நெடுங்கண்மா லைப்புனைத
லூரைப் பகட்டற் குறும். (௧௫)

### போயிப்பூசை.

குழைத்தணிதலக்கமணிக் கோவைபுனைத
றழைத்த மணிகிலுக்கித் தாழ்தல்-ஒழுக்கமிலா
வாயான் மெணமெணத்தல் வம்பணித னம்பர்க்கிங்
காயின்மெய்ப் பூசை யல. (கசு)

### பேயிப்பூசை.

சித்தந் தெளியிற் சிவமாகி யன்றிமனப்
பித்தந் தெளியும் பெருமருந்தாம்-சித்த
மடங்குதலே பூசை யரனுக் குவப்பாங்
கிடந்தானே சாயுச் சியம். (கஎ)

### மாயாசொருபம்.

சித்த விகற்பஞ் செகமாகித் தானெனவோர்
கத்தனுமாய் நின்ற கணக்கறியீர் - சித்த
மடங்காமன் மாயை யகலா தடங்கிற்
றிடந்தானே சாயுச் சியம். (கஅ)

### மனோபசாந்தி.

சித்த மடங்கச் செயித்தற் சிவமன்றி
யத்தனையு மித்தையென வாய்ந்தறிதல்-புத்தி

பிறவாக் கெடக்கிடந்த விவ்வுடல மாதி
திறமாசர் வென்னத் தெளிந்து. (கக)

உலகசதசத்விலக்ஷணமேனல்.

பேய்த்தேர் முகக்குறும்பேதைகுணமென்றருளால்
வாய்த்தபெரி யோர்மொழிந்தவாசகத்தை-யாட்ந்து
வறிவாகக் கண்டே யதுவாக் கரைவிர்
பிறவா நெறியிதுவே பின். (உ0)

உலகமுத லெல்லா முறுபேய்த்தே ராகும்
பலவுலகுஞ் சொப்பனத்தின் பண்பே-சலனமுறுந்
தூல மனமேயித் தொல்லுலகாத் தோன்றுமா
லேலவுள தாமோ விது. (உக)

தூலமனமே உலகேனல்.

தூல மனத்தின் றுரிசறுத்துத் தூமனத்திற்
காலமுதன் மூன்றுங் கடந்தகன்று-ஏலுஞ்
சகலமுதற் கேவலமுஞ் சான்றாயி னேரி
லிகலிலா வீடென்ப வே. (உஉ)

மனத்தி னுருவாகு மண்முதலாம் பூதம்
மனத்தினுரு வேயனைத்து மற்று- மனைத்தோத்து

மாதலினு லன்றே வதையடக்கன் முத்தியெனு
மோதிரோ விங்கெறியி னுற்று. (உ௩)

## மனோநாசவியல்.

மனதடக்க லொன்றை மறந்திருப்ப தன்று
மனதடக்க றியானமல மற்றின் - மனதடக்கன்
முப்பாழுந் தாண்டி முடிவிலருட் போதமா
யிப்பார்வை நீங்கிடுத லே. (உ௪)

## முத்தர்திறம்.

இப்பார்வை நீங்கி விகத்திற் பிராரத்த
மெப்பார்வை யானுண்ப ரென்றக்கா - லப்பார்வை
கம்பத்தின் மீது கழைக்கூத்தி போன்றேகி
தம்பத்து மாடுவரே தான். (உ௫)

## சீவன்முத்தரியல்பு.

சம்பத்தி லாபத்திற் சற்றும் விகற்பமிலா
ருப்பருபர் வாழ்வு முளங்கொள்ளார்-இப்பர்
வருபவற்றை யெல்லாம் வரையாது கொள்வார்
திருவாளர் ஞானத் திறன். (உ௬)

செகமதனின் மித்யாத்வ சித்திபெற்றோ ரித்தி
லகமமதை கூடி யழுந்தார் - இகமதனில்
வெந்த படமும் வறுத்தவிதை யும்போலச்
சிந்தைதெளிந் துற்றார் திறம். (௨௭)

சித்தந் தெளிந்தோர் செகநெறியின் மூழ்கினுமற்
றெத்தொழிலு மின்றி யிருப்பினுமே-நித்த
மறவா நினையா மகத்துவமா நிற்குந்
திறமன்றோ முத்தர் திறம். (௨௮)

வீட்டிலுறு வாரன்றி மேன்மேலு மாதரிடைத்
தேட்டிற் பலவின்பந் தேக்கினுமே-காட்டின்
முழையிற் றவமிருக்கு முத்தர்க் கிவர்க்கு
மிழையுமிடைப் பேத மிலை. (௨௯)

ஏதுஞ் சிவமா யெதிருற்றா ரொன்றையுமே
போதுமதற் கன்னியமாப் போந்துண்ணார் - தீது
நலமென்று நாடார் நவைதீ ருளத்திற்
சலமற்றார் கட்டுண்ணார் தாம். (௩௰)

அம்மைச் சிவமாகத் தாங்கண்ட ஞானிகடா
மிம்மை மறுமையெனவெய்தறியார்-மும்மைமனச்

சங்கற்ப மென்றே சனியா ரறிவானு
ரிங்ஙுற் பவமே திவர்க்கு. (௧௧)

ஏதுசாத்தனங்கூறல்.

முற்பவங்கள் கோடி முயன்றுளமிட் காமியமாம்
பற்பலவாஞ் சற்கருமோ பாசனையால்- உற்ற
மலமுதலாம் விட்சேப மாண்டுளத்தின் மேலா
மிலகலுறு சாதனநான் கேய்ந்து. (௧௨)

விவேகமொடு வைராக மேவுசமை சட்க
முவப்புறுவிட் டிச்சையென வுற்ற-வுவமையிலா
வீடுறுமெய்ஞ் ஞான வியன்சதுட்ட சாதனங்கள்
பீடுறுவா ருள்ளம் பெறும். (௧௩)

குருசேவை

சாதனங்க ளுற்றுளனுஞ் சற்சீடன் முத்தாப
வேதனைக்கிங் காற்று விதமோடிப் - பேதமறுஞ்
சற்குருவைத் தேடிச் சனியாப் பதமடைய
வெற்கருள்வீ ரென்று னெழுந்து. (௧௪)

அதிகாரி யென்ன வவரகத்தி னோக்கி
யிதுகா றுனதுளத்திலேயுஞ்-சதுரில்லா

வண்டானிரே

வுள்ளதுமா யில்லதுமா யுற்றவெலாந்தள்ளென்றார்
தள்ளினன் றானன் றான். (௧௫)

### சுவாநுபூதி.

தானேதா னாகித் தழைத்தா னகத்திற்போற்
றானே புறத்துந் தனைக்கண்டான்-கோனாரு
முப்பாழுந் தாண்டி முதற்சிவமாத் தற்கண்டா
னிப்பார்வை நீங்கினா னே. (௧௬)

### முத்திரை.

இப்பார்வை நீங்கலென வின்னஞ்சொலக்கேளீர்
தப்பா துடறறிபோற் சார்வதல-துப்பாகு
நாசிநுதிக் கண்ணிடையி னாட்டமல வெப்பாலுந்
தேசுறுசின் முத்திரையாந் தேர். (௧௭)

### சின்முத்திரை.

சின்முத் திரையென்னற் சித்தாய்த் திகழ்வுறுதற்
சின்முத் திரைசிவமாத் தேர்வதுவே-சின்மயமுந்
தேகாதி நாதவரைத் தேறா தறிவாத
லேகாந்த மாகி யிருந்து. (௧௮)

## ஐக்கியஞானம்.

ஏகாந்த மென்ப தியம்பக்கேள் காண்பொருளாந்
தேகாதி யிந்தியங்க டேர்கரணம்-வாகான
வாயுவொடு மற்றிவற்றில் வாய்பஞ்ச கோசத்திற்
பாயவத்தை மூன்றும் பறித்து. (௩௯)

காட்சிமுதற் காண்பொருளைக்காண்பானிட மதனி
லாட்சியறக் கண்டுளத்தி லாறியே-சாட்சி
சிவமாகி யேகமெனத் தேர்ந்துய்தி கூட
லுவமையறு மேகாந்த முன். (௪0)

சந்தையிடை நின்றுஞ் சநியாஞ் சமுசாரப்
பந்தமிடை நின்றும் பழகுவரே-சுந்தரமா
மெய்ஞ்ஞா னிகளருளான் மேவுமிதுவாய்பபேசு
மஞ்ஞானிக் காமோ வழி. (௪௧)

## அதிகாரிகள்.

அதிகாரி மூவகையா மத்திம் மந்தவ
னதுதீ யா மென்னுமறை யானை - மதிநின்
றசம்பா வனைமுதலா யாகுந் தடைகள்
வசமாகா தொன்றுமன் வாய்ப்பு. (௪௨)

அவரு ளிடைநின்றோ னம்மொழியே கேட்டுஞ்
சுவரி னிடைவெளிபோற் றோன்று - இவருஞ்
சுருதிகுரு யுத்தி சுவாநுபவ நான்கும்
இருந்தக்கேட் டொன்றானன் றோர்ந்து. (௪௩)

கடையாகி நின்றோன் கருத்தினிடை காண
தடமாமஞ் ஞானமோ டைய-மூடியா
விபரீத மேன்மேல் விளைவாகி நின்று
னபவாத மாகா தகத்து. (௪௪)

குருவினிடஞ் சென்று குணங்கிதியே யென்றன்
கருவகற்ற வந்தவருட் காவே-தருமொழியைத்
தீன னறியேன் றிகைப்புறுகின் றேன்மயலிற்
காணவருள் கென்றான் கனிந்து. (௪௫)

ஆகரத்தி னன்னை யணைப்பதுபோ லாங்கவனைத்
தீதகற்ற வெண்ணணித் திருவடியை-வாதறுகென்
றுந்த முடிமே லுவப்புற்றான் சற்குருவின்
சொந்தபணிக் கேய்ந்தான் றணிந்து, (௪௬)

ஐயா வெனையாண்ட வற்புதமே தேவர்தரு
பொய்யா மொழியென்னுட் போக்கிலையா-லைய

மயக்க மிகவு மயங்கிச் சுழல்வேன்
றியக்கமறுத் தாள்வீர் தெளிந்து. (௪௭)

நீசிவமே யாகுமென நேர்ந்ததிருவார்த்தைதனைப்
பேசுமொ மாருமதத்தும் பேசறியேன்-கூசு
மனமயக்கந் தீர மறித்துமிதைச் சொல்வீர்
சினமொழித்த மாதவரே சேர்ந்து. (௪௮)

## சமயபோதகம்.

மதமென் றனையவற்றின் மாண்பெதுவென் றாய்ந்தா
லிதமகிதந் தேர்வா யிகத்தில்-மதமென்ப
தவ்வவ் வமயத்தி லானவருட் கோலத்தைச்
செவ்வியுறச் சொன்னதுவே தேர்ந்து. (௪௯)

## மதத்தர்.

தம்மதமே மேலென்று தாமடமாப் பேசுவார் யுறு
தம்மதத்தி னுண்மைதனைத் தாமறியார்-செம்மை
மானையைக்கண் டந்த ரறைந்த பழங்கதைபோ
லீனமுறச் சொல்வா ரிடர்த்து. (௫௰)

தாந்தாமு நின்றமதந் தாமறியக் கல்லாதார்
மீந்தாரை மூடரென வீள்ளுவரே-போந்த

வஞ்சிசாரி யாவா ளவள்முன்னெவரு
மஞ்சிசாரி யென்பதுபோ லாம். (௫௧)

அகச்சமயங்கள்.

சைவமுதல் வைணவமுஞ் சாத்தேயங் காபாலந்
தெய்வக் கணுபதமுந் தேர்சௌரம்-உய்ய
வருசமய மாறும் வளம்பெறவே யோது
மொருமுதலி னுண்மையுளத் தோர்ந்து. (௫௨)

சமயவிசாரம்.

அரியென்ப தேதிங் கரனே தறியிற்
பெரிதுசிறி தென்றொன்றைப் பேசார்-அரியரன்மற்
றெத்தெய்வ மேனு மிதுவதுவென் சுட்டிறந்த
சுத்தப் பிரமமெனச் சொல். (௫௩)

மதமாறு நின்று மதங்கடந்த வொன்றை
இதுவென்றே யேற்பதற்கிங் கில்லை யதனை
லதையதையு மார்ச்சித் ததையிகழ்ந்து பேசா
ரிதமறிவா ரென்று மிசைந்து. (௫௪)

அதீதசமயம்.

சுத்தப் பிரமஞ் சொரூபமற் றுள்ளவெலாஞ்
சத்தப் பிரமமெனச் சாயுமே-கத்துமத

வம்பரறி வாரோ மதங்கடந்த தத்துவமா
மும்பரறி யாவுணர்வை யுற்று. (௫௫)

மதமாறு நீத்து மதங்கடந்த வொன்றைச்
சதமா மூலகமெனச் சாயும்-இதமறியாப்
பித்தரறி வாரோ பிணவுடலை நீத்தவருட்
சித்த ரறியுமதைத் தேர்ந்து. (௫௬)

பரசிவமே முக்கட் பரனே யருளே
திருமேனி கொண்டெனையாள் தேவே - மருளான்
மதமாங் குழியின் மடிவேனை யேற்றுஞ்
சதுராகின் பொற்றாள் சரண். (௫௭)

அரியாரெனென் றுன வதிசயத்தைக் காண
வுரிமையடி யேற்குளதே னுள்ளம்-பெருகியே
போகித் தருள்வீர் புனிதா வெனக்குருவுஞ்
சாதிப்பா ருண்மைதனைச் சார்ந்து. (௫௮)

மதங்கடந்த வொன்றே மகமாயை தன்னி
லிதமுறவே யேய்ந்தீச னென்று-மதுவேபின்
சத்துவமி ராசதமுந் தாமதமா முக்குணத்திற்
பத்தியொரு மூவடிவாம் பண்பு. (௫௯)

## ௰௬ தத்துவோபதேசவெண்பா.

சத்துவத்தி லீசனரி சார்ந்திடுமி ராசதத்தி
லொத்தவிதி தாமதமு ருத்திரனாய்-வத்துவதே
முக்குணத்தின் மூவடிவா மோகஞ்செய் மாயையய
லெக்குணமு மில்லை யிதற்கு. [௬௰

பரமார்த்த மொன்றே பரப்பிரம மற்றும்
பரமார்த்த மல்ல பலவும் - பரமார்த்த
மப்பிரம மொன்றே யவித்தையிற்பல் சீவர்களா
மிப்பரிசா லத்துவிதமே. (௬௧)

உபாதியினா லொன்றே யுருபலவாக் காணு
முபாதியறி லேகமா முண்மை-யுபாதி
சமட்டி வியட்டியெனச் சாருமிரண் டாகுஞ்
சமட்டியெனல் மாயையது தான். (௬௨)

மாயையென லீசன் மருவுமிட மாமொன்றே
யாயி னவித்தை யதுபலவா-மேயு
மிதுவியட்டி யென்ப திதிற்பலவாஞ் சீவ
ரிதையின்னங் கேளீ யிருந்து. (௬௩)

சமட்டி சராசரங்க டாமொன்றாக் காண
லமையுமிதி னேருடல்வி யட்டி - சமட்டி

வணமெனல்போ லும்வியட்டி வாய்தருவொன்றே
வினமறிந்தோர் சொல்ப விது. [போ

சத்துவத்தி லீச்சுரனுஞ் சாரும் ரசோகுணத்திற்
சித்தாகுஞ் சீவனெனத் தேருமே-தத்துந்
தமசதனின் முற்றுந் தழைத்திடுந் தங்கள்
சமைதலுறு மாயைச் சதிர். (௯௫)

சீவேச் சுரசகமாத் தோர்முப் பொருளனைத்தும்
பாவுறுமா யைத்தோற்றம் பார்த்திடினே-யொவாப்
பரப்பிரமந் தானே பரமார்த்த மாயைத்
திரமூன்றும் பொய்யே தெளி. (௯௬)

முப்பொருளுஞ் சத்தா மூடியா வநாதியெனச்
செப்புவரா லென்பாயேற் செப்பக்கேள்-கப்பு
மலமாயை கன்ம மயக்கமதிற் றேரார்
நிலையறியா ரிம்மதத்தார் நின்று. (௯௭)

சத்தென்ப தொன்றே சதாமூன்று காலத்து
மொத்தே யொருபடித்தா யுள்ளதுவாம்-பத்தா

## அத்துவோபதேசவெண்பா.

வகையாகு மாயை வளப்பமெலாந் தேரிற்
றிகைப்புறுமப் பேய்த்தேர் தெளி. (சுஅ)

அசத்தென்ப தென்று மறியினுள தன்று
வசத்திதனைமேலோர் கடமிலா தாகும்-நிசத்தி
லிதுவே யுபகிட்டத மெல்லாமுங் கீதை
யிதுவே பரமார்த்த மென். (சுகூ)

அவித்தை யறுமளவு மாகுமெலா முன்னமை
யவித்தையறி லத்துவித மாமே-யவித்தை
பொருளல்ல வற்றைப் பொருளென் றுணர்தல்
மருளற்று முண்டோ மறைப்பு. (எ௰)

உலகமுதன் மூன்று மூறுசத்த மென்னி
னிலசமதிட் டானத் திருந்தே-தொலைவி
லொருபிரமம் போல வுறுதியுறு மன்றே
திரமா யபாதிதமாத் தேர்ந்து. (எக)

அலைகுமிடந் தோன்று மரவதுபோற் சத்தா
விலங்குபிர மத்துலக மேயும்-கலக்கு
மரவமது காணி னலங்கலிது போலும்
பிரமத் துலகசத்தாம் பேசு. (எஉ)

ஞானதசையி னழுவுமெனின் மூப்பொருளு
மானவிவை சத்தென்ப தாகுமோ-ஞானமெனல்
தானே யனைத்திற் றனிலனைத்து மாயறிதல்
வானே முதலாம வை. (௭௩)

சாக்கிரத்தை யன்றிச் சமையுமுல கெங்குண்டாம்
சாக்கிரமுஞ் சொப்பனத்திற் றானுண்டோ-நோக்கிற்
சுழுத்திதனி லுண்டோசொல் சொற்றவிரண்டு மிரு
சுழுத்தியி லுண்டோவுலகஞ் சொல். (௭௪)

சுழுத்திதனிற் சூனியமாத் தொல்லுலகந் தீரும்
சுழுத்தி சுகமவித்தை சொற்றும் - முழுமுதலாந்
தன்சொருப மாகுந் தனித்துரியத் துண்டோசொல்
இன்னலுறு மிம்மூன்று மே. (௭௫)

சத்தாயி னிவ்வுலகஞ் சாராதோ தன்னிலையிற்
சத்தாயி னிவ்வுயிருஞ் சாருமே-சத்தாம்
பரமாயி னவ்விடத்திற் பார்த்தற் குருவேதோ
வரமாந் தனக்கயலில் வாய்த்து. (௭௬)

தன்னை மறந்திடத்திற் றானே பரமென்றாந்
தன்னை மறந்திடத்திற் றானுயிராந்-தன்னை

யுலகமுமாக் கண்டே யுறுமுப் பொருளாங்
கலகமுற லாமோ கதி. (௭௭)

தனக்கயலாய் முப்பொருளுஞ் சத்தியமதாயிற்
றனைத்தள்ளி யொன்றேனுஞ் சாருந்-தனைத்தள்ளி
னொன்றில்லை யென்ப துறுமுண்மைச்சோதனையிற்
பொன்னின்றிப் பூடணமே போல். (௭௮)

[ளிந்து

முப்பொருளும் பொய்யோர் முதலன் றெனத்தெ
ளப்பொருட்குந் தானே யிரும்பொருளாய்க்-கப்பு
மனமாயை தீர்ந்து மயக்கறவே யின்றே
ரினமாமுப் பாழ்கடந்தா ரென். (௭௯)

சத்தே பரமார்த்தஞ் சாருலக மாயைவரை
யொத்தவிவ காரிகமென் றோதுமறை-யித்தால்
அகலுமொரு மூன்று மநாதியசத் தென்னப்
புகன்றோர் சுவாநுபவம் போந்து. (௮௰)

இவ்வியல்ப தாகி யிலகுமநு பூதியெனக்
கெவ்வியல்பா லுண்டாமோ வென்றழுங்கும்-கவ்வு
மலமுதலாம் விட்சேப மாண்டவரு மைந்தா
கலகமுறு விம்முறையிற் கல். (௮௧)

சுழுத்தி சுகசொரூபந் தோன்றுதோ சும்மா
விழித்திருக்கி னென்னபயன் மேவும்-பழுத்தமன
நாட்டச் சுழுமுனையி னாடிமடைக் கொக்கேபோற்
பூட்டி நடுவணையிற் போந்து. (௮௨)

வானெல்லாங் கம்பி வளமாந் சுழுமுனையிற்
றுறைகப் பூரணமுந் தாக்காதோ-தேறைகுங்
குண்டலிப்பா ரேக்கிக்குணங்கடந்த மௌனவெளி
யண்ட மெலாம்விழுங்கி யற்று. (௮௩)

விண்ணெல்லா மோங்கி விழுங்கியுள வெப்பாலுங்
கண்டவெலாங்கண் ணுக்கரையாதோ-மண்டுமொளி
சாகாக்கா லூதிற் சமைவுறுமெட் டுத்திசையும்
வேகாத் தலையில் விரைந்து. (௮௪)

பட்டப் பகற்போற் பலியாதோ பாழ்வெளியி
னட்டம் பயிலுமரு ளானதடி-முட்டிச்
சிலம்பொலியி னோசை திகழாதோ காலன்
கலங்கானே கண்டாரைக் கண்டு. (௮௫)

வெறுப்பு விருப்பகன்று மேவாதோ வுள்ள
மறப்பு நினைப்பகன்று மற்றுஞ்-சிறக்கு

## உஉ. தத்துவோபதேசவெண்பா.

முவமையறு மோன வுயர்வீடு மேவு
நவமிக்க நாட்ட நடு. (அசு)

நாதாந்த மோன நடுநாட்ட மென்னுமதை
யேதாந்த மாக வியம்பக்கேள் - போதாந்தப்
பூரணமா யென்றும் புகல்சகல கேவலத்தின்
முரணையில் லாமற் றனித்து (அஎ)

தானேதா னாகித் தனிச்சகல கேவலத்தி
லானம னிற்த மனுபூதி-தானே
நடுவணைய தென்று நலமாஞ் சுழும்னைக்
கடுவெளிய தென்ப கணித்து. (அஅ)

கம்பலங்க ளொன்றையுநீ நாடாதே நாட்டநடுச்
செம்பலமாக் கண்டு செறிவுற்றால் - அம்பலத்திற்
கான்மாறி யாடுங் கருணைக் கழலருளாந்
தேன்மாரி பெய்யுந் தெளித்து (அகூ)

நன்றென்றுந் தீதென்று நாடாதே கற்றறிவா
லொன்றென் றிரண்டென்று முன்னுதே-துன்னு
முருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றிதை. (கூ0)

தேவாதி தேவ மஹாதேவ நீனனெனை
மூலா முழுமுதலோர் மூர்த்தியே - காவா
யரனே யரியே யயனே யருளெங்
குருவே குமரா குகா. (சுக)

பகருஞ் சமாதி பலவங்கோ பாங்க
மகிழ்வோ டெனக்குளமு வந்து-நிகரில்லா
மோன வடிவே முதல்வா மொழிந்தருள்வீர்
ஈன னடியேற் கெனை. (சுஉ).

சத்தானு வித்தஞ் சவிகற்ப நிட்டையகை
சத்தா னனுவித்தஞ் சாருமிரண்-டித்துடனும்
அத்துவித பாவ மவஸ்தான ரூபமிரண்
டொத்த நிருவிகற்பென் றோது. (சுங)

சும்மா விருவென்று சூதா மொருமொழியை
நம்மாலே கேட்டசத்த நாடிநிற்றல் - செம்மையுறு
சத்தானு வித்த சமாதிமற் றென்றஃதி
னொத்தபொரு ளோர்ந்திருத்த லுன். (சுச)

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா விருப்பதுகா
ணல்லும் பகலு மதுவாகச்-சொல்லிறந்த

வத்துவித பாவனையா மத்துரிய பாவமிற
வத்துவிதா வஸ்தான மாம். (௬௫)

விகற்ப நிருவிகற்பா மேவுமிரண்டி த்தில்
விகற்பிற் றிரிபுடியு மேவும்-விகற்பமில்
ஞாதாவு ஞேயமொடு ஞான மிவைமூன்று
மாதரவா நிற்ப தறி. (௬௬)

நிருவிகற்ப மென்னு நிலை யிதனு லாகு
மரிதா மொருபயனு மற்றால்-வருவிகற்பஞ்
சாதனமா மென்ப சமித்தற் கிருவிதமாம்
வாதனைக ளுள்ள மரீஇ. (௬௭)

கண்ணிமைத்தற் போதினிலே கண்டார்க்கருமமறும்
கண்ணிமைப்பிற் காணுக் கதிகாணும்-கண்ணிமை
ருஞுதுந் தற்பரமாந் தன்னிகரிற் பூரணமாம்[ப்பிற்
வாஞுரும் வாழ்வு வரும். (௬௮)

நிர்விகற்ப நிட்டை நிலையிற் சுகர்முதலோர்
நிர்விகற்ப மாகி நிலைத்திட்டார்-நிர்விகற்பங்
கணணிமைப்பிற் கண்டு கலங்காத பூரணமா
யுண்மையுருந்தா ருற்றவெலா முற்று. (௬௯)

சநகன் பகீரதனுஞ் சார்வேடர் வேந்தா
மநகன் சுர கைய மற்று வநீத்த
வாகாஞ் சிகித்துவச மன்முதலோர் தீர்ந்துற்றார்
ஏகாந்த மில்லத் திருந்து. (௰)

தெரிவுற்ற நிட்டை தெளிக்கேன் வகைக்கய
மருளுற் றதனின் மயங்கும்-அருளுற்றே
நையாமற் சித்த நலிவகற்றி நிற்குமா
றையா வருள்வீ ரரண். (௰௧)

நிருவிகற்ப நிட்டைக்கு நேருந் தடைக
ளொருநான்குண் டோத வுணர்தி-யருமைந்தா
ஒன்றுலயம் விட்சேப மோதுங் கஷாயம்
நன்றாஸ்வா தமென நன்கு. (௰௨)

சமாதி முயல்விற் சலிப்பு முறக்க
மமையுலய மென்பா ரறிந்தோர்-இமையளவில்
நீத்திங் கிதனை நிலைபெறுதற் பாற்றுகும்
வேத்தியநன் னிட்டை விதி. (௰௩)

நிட்டை நிலைபி னிலைத்துண் முகமான
வொட்டும் விருத்தி யுளமகறல்-மட்டில்லா

விட்சேப மென்பர் விழுமியோர் நுட்பமதாச்
சட்டமுற நிற்றல் சமம். (௩௪)

நிட்டை நிலையி னிருவிகற்பாம் யோகியற்கு
விட்டவிரா காதி துயர் பேவுறு-சிட்டற்
கொருகால முண்டெனினு முண்டாங்க ஷாய
மிருகாலுண் டாத விலை. (௩௫)

நிருவிகற்ப நிட்டையினை நீங்கித் துயரம்
வருவிகற்பாஞ் சந்தோட மன்னி-யொருபிரமத்
தானந்த மேவிடவிங் காகுந் தடையதுவே
யீனரஸாஸ் வாதமென வெண். (௩௬)

மணச்சம் பிரமத்தில் மாங்கல்ய பந்தம்
பணச்சம் பிரமத்திற் பண்பு-மெனமறந்த
பண்டைப் பழமொழிபோற் பார்த்தே நிருவிகற்ப
முண்டதுபோ லாத லுளம். (௩௭)

அற்றால் ரஸாஸ்வாத மாகுந் தடையிதனைப்
பெற்றோர் முயன்று பெயர்த்திடுவர்-முற்று
மறிந்தாய் மகனே யறிவுறுதற் கின்னந்
திறமுளதேற் கேணீ தினம். (௩௮)

ஞானமென லேதோ நவின்றருள்வீ ரையாவெற்
கானவசம் பாவனைக ளற்றிடவே-தீன
னெனவிரந்த மாண வனிசைந்திடவே சொல்வார்
தனையறிந்த தேசிகருந் தான். • (௱௯)

தேக மிதுசடமாந் தேகிநான் சித்தென்று
மோக மறமனத்தின் முட்டறலே-யோகமுறு
மெஞ்ஞான மென்ன விளம்பு மறையந்த
மஞ்ஞான மற்றவெலா மாய். (௱௰)

மெச்சும் பிரமத்தின் மேவு மிலக்கணங்கள்
வைச்சுமறை யேதாக வாழ்த்துமோ-அச்சமற
நச்சுந் தொழூம்ப னலமுறவே யோதுவீ
ரிச்சையெலாம் வல்லீ ரெனக்கு. (௱௧௧)

பிரமம்.

சத்துசித்தா னந்தஞ் சமந்திரமாஞ் சாட்சியக
நித்தபரி பூரணநி ராமயமும்-வத்து
வமிர்தமலு தீத மசலமவி கார
மமிதமென வாழ்த்து மறிந்து. (௱௧௨)

## மாயை.

சகமுதல வான சதுராகு மாயை
பிகமா மிலக்கணமென் னீதும்-அகலமுறச்
செப்புவீ ரையா சிறியேற் ககண்டசில
மொப்பாவீ ருள்ள முவந்து (௧௧௩)

சிவத்திற் கெதிர்மறையாஞ் செய்தியுறுசத்தி
சிவத்திற் கிரண்டாய்ச் சிறிதும்-உவமையுற
வோதவரி தொன்று முயர்சத் தசத்திரண்டிற்
போதவரி தொன்றுமிப் போது. (௧௧௪)

அசத்துசட துக்க மனித்தமொடு கண்ட
நிசத்திலிது சோதனையி னில்லா-தசத்தமுறும்
முன்பில்லை முத்தி முடிவினுமற் றில்லையெனி
னின்றுண்டு போற்றோன்று மே. (௧௧௫)

உண்டெனற்கிங் காகா துறுமாயை காரியத்திற்
[ன்னைப
கண்டிருக்க வின்றெனவே கட்டுரைத்தற்-பண்டெ
பெற்றுண்மலடியெனப் பேசுதலொப்பாமென் னின்
முற்றுமிதைச் சொல்வேன் முடித்து. (௧௧௬)

சதசத்தா யோர்பொருளைச் சாற்றலழ கன்று
சதசத் தெதிர்மறையாஞ் சத்தம்-திதமொன்றிற்
கூடாத வாறதனாற் கூறு மநிர்வசனம்
பாடியத்தி லாகுமருட் பண்பு. (கஎ)

பிரமத்தின் வேறாப் பிரிதிலையா மென்றே
பிரமத்தைப் பேசுமறை பேச்சும்-வரமிக்க
வான முறையி லறைந்தா ரறுபவிக
வீனமுறு மாயையிலை யென்று. (கஅ)

இல்லே யெனுமாயை யென்று ரருணகிரி
பல்லாரு மேற்றும்பரிசாகும்-வல்லா
ரருட்டாயு மானுரு மம்மாயை யில்லைப்
பொருட்டாகு மென்றூர் புனைந்து. (கக)

சாங்தோக்கி யத்திற் றனியுவமை மூன்றூனு
மேந்தவெலா மின்மையென வெய்தியதே-போந்து
வருமதுவா சாரம் பணமாம் வசனம்
பொருளதுசொன் மாத்திரையாம் புந்தி. (உ0)

பிரமஞ் சிவமான்மாப் பேசுமொரு மூன்று [ன்
மொருபொருட்ட தாங்கிளவியோர்தி-வருமிதுபோ

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்

## ௩௰ தத்துவோபதேசவெண்பா.

மாயை தமசு மருவவித்தை யஞ்ஞான
மேயுமொரு பொருட்டே யென். (௧௨௧)

சிவத்தின் பரியாயந் தேர்ந்தே னதுபோ
லவமாகு மாயைக் கவிந்தேன்-உவமையறு
மோனு வுமடிமை மோகங் கெடவருள்வீர்
வானாகுஞ் சத்தின் வளன். (௧௨௨)

சத்தென்ப தொன்றுஞ் சடியா தொருமூன்று
மியாத்துலவு கால முளதாகுஞ்-சித்தநீஉஞ்
சற்சொரூப மாகுஞ் சனித்த தனைமற்றும்
பற்சமய மோர்தற் பரம். (௧௨௩)

சத்துசித்து மொத்ததிலை தானே சுகவடிவா
நித்தமுமா கிற்கு நிசமாகும்-வத்துவிலை
வாய்த்தபடி சொன்னேம் வகுத்தமறை யந்தத்து
ளார்த்தவிது பூரணம தாம். (௧௨௪)

அய்யா வருள்வீ ரகண்டபரி பூரணமாய்
மெய்யா மிதுவொன்றே மேவுமெனி-னுய்யுமுறை
யீச்சுரனுஞ் சீவ னிவனுலகம் போம்வழியே
தாச்சரிய மார்க்குரைப்ப தாம். (௧௨௫)

ஆச்சரிய மன்றீ தறிந்தோர்க்கு முப்பொருளு
மாச்சரிய மாகு மமைந்தவகை-காச்ச
மாமுண்டோ மற்றிமையின் மன்றொரு சாலத்தின்
வராமன்றே காட்டு மறைத்து. (௧௨௬)

சாலேந்தி ரத்திற் சபையுஞ் சராசரங்கள்
போலேந்தி யங்கள் புரிந்தவத்தை-மாலாகு
மாமனத்திர சித்திரமா மாயையினை காட்டுமாற்
றாமனத்திற் றோன்றுந் துலங்கி. (௧௨௭)

தானேதா னாகித் தழைத்த னிரதிசயந்
தானே யொருமாயை தன்னிலே-ஊனு
யுயிராய்ப் பரமா யுலகுமாத் தோன்று
உயிர்ப்பாகு மாச்சரிய முன். (௧௨௮)

நித்திரையி னித்த நிகழு மொருகனவி
லொத்த நதிமலைக ளூர்முதலா-மத்தனையு
மேதோ நிசமா யிருந்தவிட மேவினைகொல்
நீதானே சொல்வாய் நினைத்து. (௧௨௯)

தூங்குங்கா லிவ்வுடலைச் சூக்குமமும் விட்டகன்று
ஆங்காங் குளவற்றை யாய்ந்தறிய-மீங்கெள்ளி

௩௨ தத்துவோபதேசவெண்பா.

லென்னே வழுவாகு மென்றுயேற் செப்பக்கேள்
மன்னே யதற்கு மதி. (௧௩௰)

அன்னமயம் ப்ராணமய மாகு மனோமயமும்
இன்னலறு விஞ்ஞான மித்துடனே-நன்னயமா
மானந்த மென்ன வறியலுறு மோரைந்து .
மீனமுறு கோசங்க ளெண். •(௧௩௧)

அன்னமயந் தூல மதன்பின் புறமூன்றுஞ்
சொன்னதொரு சூக்குமமாச் சொன்னவுடல் - மன்
வானந்த கோச மதுவே சுழுத்தியுட [னுமொரு
றுணுகுங் காரணமே தான். (௧௩௨)

தூல மகன்றாற் றணையாகுஞ் சூக்கவுடற்
சால வழுங்குஞ் சவம்போலாந்-தூல
முயிர்ப்பின்றிக் காணு முருபயமாத் தோன்று
முயிர்ப்புளதா னாகமிலை யுன். (௧௩௩)

அய்யா கனவதுபோ லாமோ நனவுலகு [னிற்
மெய்யாகப் போந்திங்கு மேவுமிதைத் - பொய்யென்
கற்றோரு மற்றோர்போற் கண்டுறுதிசொல்லுவரோ
நற்று யினுமினியாய் நன்கு. (௧௩௪)

கற்றோரு மற்றோர்போற் கண்டிதுவே மெய்யென்
லற்றேயன் றேவதையு மாக்கினார் - முற்று [னி
பிரண்டினுமே யங்கன்று மெய்திடினே மெய்பொய்
யிரண்டுள்ளார் சொல்லாமோ மெய். (௧௫)

நனவுதனைப் போற்றேற் கனவுங் கனவும்
வினைவிற்றுய ரீசன் விதித்தா - றெனவோதி
னென்னே பிறையென்னி லீச னவிகாரி
யன்றேறுங் காவ லதல். (௧௬)

அவ்வவ் வவத்தைதனி லாவதின் மெய்யென்னி
லெவ்வவ் வவத்தைதனை யாக்குமது - வெவ்வா
வவித்தையெனச் சொல்லு மருமறையி னந்த
மவித்தைதவொ யாவையும் பொய். (௧௭)

பிரமத்திற் கன்னியமாப் பேசுமெலா மென்றும்
பரமற்ற மாயை வகையா - இரமற்ற
பேய்த்தேர் மலர்மகன் போசுங் காற்றரவம்
வாய்த்தகறு வெண்ட மதித்து. (௧௮)

தோற்று முலகத்தைச் சொன்மாத் திரமாகச்
சாற்று மறைமகற் சாற்றுதலை - தேர்பதெவ

## ஙச தத்துவோபதேச வெண்பா.

னென்னிற் சகமில்லை யென்பதற்கே யாருமிது
பன்னுங் கயிற்றரவிற் பார். (கஙகூ)

தேரிற்பொய் யாருந் தெரிகயிற்றாம் பாம்பதூஉஞ்
சீரிதுபோ லின்றே சகமென்னிற்-பாரில்
வழுத்தியபேய்த் தேர்போன் மதித்திடுக மாறு
செழித்தமறை செப்புந் திறன். (கசய)

பேய்த்தேர் தெளிவுற்ற பின்னுமது காண்கினுமற்
றூர்த்தருந்தற் காகா ததற்குநிகர்-சீர்த்த
செகமென்று சொல்லற் சிரிப்பன்றோ வென்னி
னிகழ்கனவிற் காமே நிகர். (கசக)

இதற்கென் னறுதி யிசைப்பையே முற்று
மிதுபோ லுலகமுழு தின்மை - யதனாலே
வானமலர் வந்திமகன் மற்றுமுயற் கோடென்னு
மானமறை யானை மதி. (கசஉ)

பொய்யாமறைபுகலும் போத மெனக்களித்து
மெய்யா யெனையாண்ட வித்தகமே-செய்ய
மலரடிக்காங் கைம்மாறு மற்றொன்றறியேன்
விலைசிறப்ப நன்றி நிலத்து (கசங)

உடன்மூன்றவா யுற்ற வுருவொருளு மானி
மடைவுறுமுன் முட்கண் டனித்தேன் - கண்ட மனைத்
மன்றாக்கோர்க் கரியா வழியானே
வரினு மிங்கேயே தெளக்கு. (௧௮)

வாய்த்தவெலாம் பொய்யாகக் கண்டுடைமை யாவுமா
சாய்த்துப் பகைமுழுதுங் காதித்தே - பார்த்துள்ள
மானாத சாக்ஷியாய் அத்தனித்து பார்த்தே
மோனத் தடைந்திருந்தா ருன். (௧௯)

சவிகற்ப நிர்விகற்பஞ் சாய்க்கதிரி வானே
வரிவிகற்ப மெல்லா மிறந்தே - அவிகற்பமாய் (
பந்துமனை மூக்கிட்பணைப் பாய்ப்பாயினைப் பார்த்துற
னைந்தமிலே யுற்றிமேல் யாய். (௨௦)

மனத்தின் சுபாவ மடந்தகா லூற்று
மனத்தின் சுபாவ மடங்கத் - தினமும்
விடயப் பற்றறுத்து மேனைந்து சலனத்
திடமாக நின்றதின்மேன் மேற்கு. (௨௧)

சமயங்களின் மெய்யாக்க நித்தியமே ஞானம்
அகமமைத்த நீர்க்குமிழ்வா மாறு - இகமதனி

## சத்தத்துவோபதேசவெண்பா.

வெவ்வா றவித்தை யிறவாதே விட்டைகளா
லெவ்வாறு முத்தி யுறல். (௧௪௮)

மாயா சகமிலையேன் மற்றெனக்கோர் பற்றுமிலை
ஞேயமா னென்றுவந்து நிற்பனெனச்-சாயா
வனுபவமாக தாயுமா னுரன்று சொற்ற
வனுபவத்தைக் கண்டே னறிந்து. (௧௪௯)

சிந்தை யிறந்து சிவமானே னெவ்வுலகு
மந்தமிலா யாறு மறிவுற்றேன்-பந்தமெல்லாம்
போய்க்கடலோ ரத்துறவைப் போனவனிற் கண்டி
பேய்க்கரும்பு தித்திக்கப் பெற்று. [ருப்பேன்

உலகமிதை யோர்பொருளா யுன்னாதே நீயே
யுலகமுத லனைத்து மோர்ந்-கலகமுறு
மாயையி னாலெனிடத்தில் மன்னுமொரு முப்
மாயமைந்த வாறு மறி. [பொருளு

சாக்கிரமுஞ் சொப்பனமுஞ் சாக்கிரமுஞ் சுழுத்தியுமே
வாக்கியமா மன்றே வவித்தையினுற்-றூக்கு
மவையுமன்று முன்னிடத்தி லானசை யறவு
மவைவுறன்று மாகா தயர். (௧௫௨)

அவத்தைகளோர் மூன்றுன் னறிவிற் சுழலு
மவத்தைகளி லேதோநீ யாயி-யவத்தையெலா [ம்
மூன்னிற் சுழல்வனவா முன்னையலா லுண்டோசொ
தன்னந் தனிநின்ற நான். (௧௱௩)

அவத்தையெலாஞ் சேர்ந்தக் கவித்தையினு லுண்டா
மவித்தையென லஞ்ஞான மாகும்-அவித்தையுமே
யாதெனக் கேட்ப தெவனெனவே யாய்ந்தயிற்
றோடு மகலுந் தனித்து. (௧௱௪)

தன்னந் தனித்துத் தனக்கயலின் றப்படி
யுன்னி நினைத்தறி யோயாமற்-சொன்ன
வொருமொழியி லுண்மை யுணர்ந்தறிவா யன்று
மருமொழியி தாகுமே தான். (௧௱௫)

தானே யுலகாகத் தானே யுயிராகத்
தானே பரமாய்த் தழைத்ததே-தானே
தனைத்தானே தான்றானே தன்னிடத்திற் றானே
தனைக்கண்ட தெல்லாமாய்த் தான். (௧௱௬)

வேதாந்தத் துள்ளே விரியுமிரண் டுத்திகளா
மேதாந்த மாக வியம்பினர்-ஓதுமிவை

MAHAMAHOPADHYAYA
[illegible] SWAMINATHA IYER LIBRARY

கஅ. தத்துவ பேத வெண்பா.

...க்கியா ரோடு மபாத மென்றுந்தி
...ந்நிக் குலந்த முதல். (கசுஎ)

...ம்ரோப மற்பாச மங்கமிலாக் கற்பனையா
மொரொன்றி லொன்றுளே நிறைக்குமே...
மாயாக காரியம் லனிக்கிடல்போலக் மற்றும்.
ப்ரமத்தின் மூன்று பிரமை. (கசுஅ)

முக்குணத்தாற் றோற்றமுறு முப்பொருளு மே...
நிகக்குணமுமில்லா விகளிடமுந்த...
...னைத்திலை லென்னனின் முடிவறியும் ம...
...த்தவரித் தாகுமிதன் கேடு. (கசுகூ)

...னைடத் தியாரோப மித்தாலாம் பந்தமது
மாண்டபவா தத்தின் மாக்குமே-மீண்ட
அரவன் றிருநாமே யானென்று கட்டைத்
திரமாகத் தேரந் திறன். (கஎ0)

அபவாத முத்திக்கிங் காணவரு மத்தி
யபவாத மித்தாலிங் காயின்-னிபமா
மூலகமுதன் மூன்று மொழிக்குளதே நிற்குங்
கலகமறு மவ்வொன்றே காண். (கஎக)

ஆன விரண்டு மறிந்தே னறிவானேன்
மோனு வெனையாண்ட மூர்த்தியே-யீனமுறும்
பந்தமெனல் சத்தியமோ பகரிதாம் ஞானத்தா
லந்தமுறு மென்பா ரதென். (௧௱௨)

பந்தமது மெய்யாகிற் பாரில் விசாரமெனு
மந்தமுறு ஞானத் தறியாதே-சுந்தரமாம்
வேதாந்த ஞானம் விளம்புவதா லெங்கருமந்
தீதாந்த மாகிற் றிவை. (௧௱௩)

பூருவமீ மாஞ்சைப் பொருளிதுவாம் தானத்தாற்
பூருவமாய்ப் போதும் புலனற்றே-பூருவத்தி
லேக பக்ஷமெனு மித்தகையாம் வாதியர்க
ளேகதே சத்திருந்தா ரிங்கு. (௧௱௪)

ஏக பக்ஷமென வித்துறையி லோர்காலே
சோகமுறுஞ் சென்மத்திற் றோன்றுதலாம்-ஊக
மூளதோ விவர்வாத மோய்ந்துத் தரத்தில்
வானற்றுப் போயினதே மாண்டு. (௧௱௫)

அகங்கார ரூப வனாத்மவகை யாவு
மிகமதனிற் பந்தமென வெய்து-நிசமூறுமிப்

பந்த மசத்தியமென் றுணருமத் யாசமதா
லந்தமுறு ஞானத் தறும். (௧௪௬)

அத்யாச மாயி னரவங் கயிற்றிற்போல்
வித்தகமா ஞானத்தால் விடுமே-அத்யாசஞ்
சாமக் கிரியின்றிச் சாராதாற் பந்தத்திற்
சாமக் கிரியுண்டோ தான். (௧௪௭)

சாமக் கிரியென்ப சாற்றக்கே ளத்யாச
சாமக் கிரியொன்றைச் சத்தியமாய்-நான்முன்
னறிந்துள்ள ஞானத் தறிவுமறி-வானிற்
றிறமுற்ற தோடமினுந் தேர் (௧௪௮)

சாமக் கிரிமற்றுஞ் சாற்றக்கேண் மூன்றனுதாம்
நாமறியுங் கண்ணி னலக்குறைவு-வீமமாய்
காணப் படுபொருளிற் காட்டுஞ் சதிர்சம்
பேணிக்கொள் மற்றொன் றும்பன். (௧௪௯)

சாற்று மதிட்டான சாமா னியஞானம் [லா
போற்றுமதன் கண்விசேடாஞ் ஞானமும்-ஏற்றவி
வத்யாச மெவ்வகைக்கு மைந்துளசா மக்கிரியா
மித்திலொன் றின்றே லிதில். (௧௫௰)

அத்யாசம் பந்தமெனலாகுமெனிற் சித்தாந்த
மத்தான்முக் கால மசத்தியமா-மித்தை
நிசமாவெக் கால நிலைத்திருப்ப முன்னர்
வசமா வறிந்துளரோ மற்று. (௱௭௧)

முன்பொருகான் மெய்யா முழுதறிந்த வாதனையாற்
பின்பொருகான் மற்றொன்றிற் பேதுறலாம்-முன்ன
மொருகாலுஞ் சித்தாந்த முண்மையெனப் பந்தம்
வருவதுண்டோ வாதனையா லன். (௱௭௨)

ஆதலினாற் பந்தத்தி லானமுத லேதுவிலை
யாதலினா லத்யாச மல்லவே-சாதித்
திதனா லிரண்டுமூன் றேதுக்க ளென்றுந்
திதமாகாப் பந்தத்திற் றேர். (௱௭௩)

சாகிர் சியதர்மஞ் சாருமோ வான்மாவைச்
சோதிக்கில் வேறு சுபாவமதால்-வாதிக்கும்
பந்தத்தி லில்லை பரமாணு மாத்திரையு
முந்துறுகான் காமதுவு முன். (௱௭௪)

ஆன்மா சுயஞ்சோதி யாகுமதா லித்தினிடந்
தான்சமவி சேடங்கள் சாருமோ-ஆன்று

விதமுறவிய் கைந்தா வியைந்துளதா மேதூஉ
மிதிவின்று லத்யாச மில். (௧௭௫)

சாமக் கிரியைத்துஞ் சாராம லெவ்விதத்து
நாமத்தி யாச நவிற்றிடுதற் - காமோமற்
றுதவிளுற் பந்த மதுமெய்யே ஞானத்தாற்
போதலுறு தென்பார் புகன்று. (௧௭௬)

அற்று மவிறு லறைந்துளசற் கன்மங்க
ளுற்றுய்ந்து செய்யி னொழியுமென - மூற்று
மதிர்ப்பா ரவர்த மறியாமை மேலோ
ரொதுக்கினு ருத்திகளா லுய்த்து (௧௭௭)

உத்திகளெதென்னி லுணருதியாஞ் சொல்வோமிங்
குத்திகளா னன்றி யுணர்வுறுபோ - சத்தியமாம்
வத்துவறி ஞான வாதனையே வேண்டுமெனன்
மத்தவறி வென்றே மதி. (௧௭௮)

சத்தியம தாயினும சத்தியம தாயினுமே
வத்துவறி ஞானத்தின் வாதனைதா - னத்யாச
முக்கியமா மென்ப முழுது ணர்ந்தோ ருத்திகளின்
சக்கியத்தைக் கேணீ தனித்து. (௧௭௯)

சாலத்தின் வல்ல சதுரனொரு மாமரத்தைச்
சாலத்தி னாலே சமைக்கநிகழ்-காலத்திற்
கண்டவ னதுமுதலாக் கண்டதனிற் சுற்றித்தான்
பண்டை யிலுப்பையனைப் பார்த்து. (௧௮௰)

சாலத்தி னாலே சமைமாதமொரு மாமரத்துற
போலத்தி யாசம் புருமன்றே-கோலத்தில்
வல்லவொரு மாயை வகுத்தவெலா மிப்படிமற்
றில்லைபிதற் காதியென லே. (௧௮௧)

ஆதியென வின்றே யநாதியதாம் பந்தமிதற்
கோது மதன்பூருவமே யுத்தரத்திற்-கேதுவாம்
பின்னுக்கு முன்னுறும் பேசினதற் காமதுபோ
லென்னுக் கிளர்வாத மிங்கு. (௧௮௨)

ஆதலினான் மித்யா வநாதியகங் காரமே
போதுமுதற் காரணமாய்ப் போந்ததா-லோது
மனிறமுடிய தாகு மகாவாக்கி யங்க
டிறமாமத் யாசமெனுந் தேர். (௧௮௩)

அத்யாச பந்த மதிட்டான ஞானத்தால்
அத்யந்த மில்லா தழியுமா-லொத்த

## ௪௪ தத்துவோபதேச வெண்பா.

வகம்பிர மாஸ்மி யறியும் விருத்தி
சகம்பிரம மென்னுமே தான். (௧௮௪)

செகம்பிரம மாகத் தெளிந்தோரும் பந்த
மிகப்பயின்று மிவ்வுலகின் மேவின்-அகம்பிரம
ஞானத் தவரு நவிவரோ மற்றோர்போ
லீனக் கருமத் திழிந்து. (௧௮௫)

அறிவாய் மகனே யகம்பிரம ஞானம்
பெறலாகும் வீட்டினரும் பேறு-குறியாகு
மற்ற வெவையு மகித்திடுசோ பானமே
யுற்றுணர்தி யுன்னு ளுவந்து. (௧௮௬)

ஆன கரும மனைவயிச்சு ரார்ப்பணமா
யீனமறச் செயபி னிதுசித்த-மானமிரு
சுத்திக் கியையுஞ் சொரூபஞா னத்திறூக்கு
மெத்திக்கு மேற்கு மிது. (௧௮௭)

சொரூபஞா னத்திறைற் சோகமெனத் தோன்றுஞ்
சொரூபஞா னத்திற் சுகமாஞ்-சொரூப
மிகையாகு மொன்றை விளக்குமறை யந்தம்
வகையாமா வாக்கியத்தான் மன் (௧௮௮)

சுருதியொரு நான்காகுஞ் சொல்லு மிருக்கெச்சென்
றரியதொரு சாம மதர்வந்-தருவ
வறிவே பிரம மகம்பிர மாஸ்மி
குறியாகுந் தத்வமஸிக் கோள். (௧௮௬)

முறையிலய மாத்மா பிரமமென முற்று
நிறைவத்தனை நாடி நிகழ்த்தும்-உறைதருமிந்
நான்குமகா வாக்கியங்க ணால்வேதத் தோங்குருடி
யான்பிரம மான வியல். (௧௮௭)

அகம்பிர மாஸ்மியறி நான்பிரம மானேன்
றிகழ்தத் துவமஸியுந் தேரு-மிகவி
லீதுரீயா மென்னுமய மாத்மா பிரம
மிதுவெல்லாந் தான்பிரம மென்று (௧௮௮)

அறிவே பிரமமென்ப தாம்பிரம லக்ஷ்யம்
செறிநா னதுவென்று செப்ப-லுறமா
மநுபவமாம் விர்த்தி யதுரீயா மென்னும்
பனுவலுப தேசப் பயன். (௧௮௯)

அயமாத்மா ப்ரம்ம மகண்டகா ரூடம்
மயமான வத்துவதின் மன்னி-பயமில்

## ௯௪ தத்துவோபதேச வெண்பா.

சகசமோன வாகுஞ் சவிகிருவிகற்ப
வகமாண் டறிவாகு மாறு. (௧௪௩)

மாவாக்கி யங்களொரு மற்றையுள வெல்லாமு
மாவாக் கியமென்ற வாந்தரமாம்-ஓவாப்
பிரம மிலேயென்று பேசுமசந் தாமா
வரணமிது நீக்கு மனத்து. (௧௪௪)

இதனு லொருமுதலிங் கில்லையெனு நாத்தி
திகமற்றுத் தீர்ந்து தெளியு-மிதுநிற்க
மாவாக் கியமோ மனதறிய வம்முதலே
நவார நானென்ன னுறு. (௧௪௫)

இதுவே யபரோட்ச மெய்ப்பரம ஞான
மிதுவறியே னென்னு மிடரா மதுவாம
பாரு வரணத்தைப் பாறித் ததுநானே
யானே னெனவுணர்த்து மால் (௧௪௬)

மாவாக் கியமாய் வளனுறமித் தத்வமஸி
மாவாக்ய நான்கில் மகத்துவமாம்-தாவு
முபதேச மாகு முயரைக்ய ஞான
வுபதேச மீதா முனக்கு. (௧௪௭)

தத்தென்ப தீசன் றகும்வாச் சியமதனிற்
றத்தென் பதுபிரமம் றன்னிலையா-மொத்து
விலக்கியத்தி லிம்முறைதாமி லெய்துந் துவமு
மிலகுமுயிர் கூடத்த ரென்று. (ககூஅ)

அதிட்டான மாச்சிரய மாபாச மூன்று
முதித்திடுசி வோச முருவம்-அதிட்டானங்
கூடத்த ஞானித்தை கொள்ளுமத முச்சிரயந்
தேடுமுயி ராபாசந் தேர். (ககூகூ)

சத்தப் பிரமமே சொல்லுமதிட் டானமா
மத்தமறு மாச்சிரய மாயையா-மொத்த
பிரதிபிம்பந் தானே பிரமையறு மீசன்
பிரதிபிம்பம் பேதப் பிரமை. (உ௱)

ஆகவிரு வன்றே யவர்பேதம் வாச்சியத்தி
லாகமுறு மாயை யவித்தைகளைப்-பாகத்தி
யாகஞ்செய் விட்டுவிடா வேற்ற விலக்கணையா
லேகமுறு மென்றே யிசை. (உ௱க)

கடமடத்தி லாகாயங் கண்டவதிற் பேதங்
கடமடங்க ணீக்கினதிற் காணுப்-படருமிதிற்

## ௨௰ தத்துவோபதேசவெண்பா.

பேதமபேதப் பிணக்கில்லை சிவேசப்
பேதமிது போலென்றே பேசு. (௨௱௨)

இது போலுற்றுறு பிசைந்தேக மாத
லதுவே யசிபதத்தி னைக்யம் - இதுபிரம
ஞானிகளின் பேறு நவிலுமத வாதியர்கட்
கானபத ப்ராப்தியது வாம். (௨௱௩)

மத்திக ளுபாதி வயமுற் றதனிற்
பிசற்றிவே பேதப் பிரமை-பதமுறாநற்
போக விழைவாற் புகலுலக போகமொழித்
தாகமொடுண் டாகு மவண். (௨௱௪)

மித்தை யெனவனைத்து மேவிடினிங் கையாவம்
முத்தியையு மித்தையது மோதுமே-ஒத்த
வகைதெரியு மாறு வகுத்தருள்வீ ரையப்
பகைதெறித்த மாதவரே பண்பு. (௨௱௫)

சொற்பனமும் பொய்யதனிற் றோற்றமுறுங் கற்பனைக்
காற்பமுமெய் யன்றுமற் றாயிடினுஞ் - சொற்பனத்திற்
கண்டபெரும் பாம்பு கடித்திடப்பக் கூவியெழுங்
கண்டநனு மெய்யென்றே காண். (௨௱௬)

ஈண்டதனி லிவ்வுலகு மிப்பவமு மிச்சருகி
யாண்ட குருவு மடிமையுமே-காண்டகையோர் | சா
சொல்லும்பொய் யாகுமிதிற் றோன்றுமிரு வாணம
நல்லபயன் மெய்யென்றே நாடு. (௱௯)

துக்க நிவர்த்தி சுகப்ராப்தி யீடென்ப
விக்கருத்தா ளுகு மிமுக்குண்டே தொக்கவதைப
போதவுணர் வில்லாப் புலையேர் நப் போந்தருள்வீர்
பாதமலர் சூட்டிப் பரிந்து. (௱௰)

(ஆன்மாஅந்தியந்தநிவர்த்தி அந்தியந்தப்பிராப்தி
சொரூபமெனல்.)

ஆன்மாத் தனக்கயலி லற்பஞ் சுகமிலையா
மான்மாச் சுகசொரூப மாகுமா-லான்மா
வசங்கமதாற் றுக்கமதற் கத்யந்த மின்றும்
நிசமாமோ நீக்க நிகழ்வு. (௨௱௬)

(விருத்தியே சுகதுக்கரூபமெனல்.)

விருத்தி யகமுகமா மேவிடலான் மாவை
விருத்திசுகா காரமதா மேவும்-விருத்தி
பகிர்முகத்தி லாயிற் பலவாச் சிதறிச்
சுகமற்றுத் தேடுஞ் சுகம். (௨௱௰)

ஆன்மா வயலி லணுவுஞ் சுகமிலையா
லான்மா வயலி லாத்தமே-யான்ம
வகமாகும் விர்த்தி யநுபவத்தி லன்றோ
சுகமாகு மோடுங் துயர். (உகக)

இகத்திற் பரமதனி லெங்கேனு மாசித்
தகத்திலடைக் கிட்டவதி லாகுஞ்-சுகமதூஉங்
தன்னின் விருத்தி தழைத்திடுமே லுண்டின்பம்
பின்னென்றி லின்றென்றே பேசு. (உகஉ)

தன்சுகமே யெங்குந் தனித்தசுக மாக்காணுந்
தீன்சுகமே யெங்கெங்குந் தானுண்டார்-தன்சுகமா
யான வெவையு மநுபவிப்பர் முத்தரெலாம்
தானுகை யெங்குந் தழைத்து. (உகங)

(சீவன்முத்தர்களின் விதேககைவல்லியாநுபூதி.)

போக்கு வரத்தறியாப் பூரணமாம் ஞானியர்க
ளாக்கமழி வற்றசிதா காயமாய்த்-தாக்கில்
விதேகமெனுங் கைவல்ய வீட்டின்பப் பேற்றிற்
சதேகத்தில் வாழ்வார் சதிர். (உகச)

அத்யந்தா பாவ மநாத்தமிலை யான்மாவிற்
கத்யந்தப்ராப்தமதா மானந்தம்-இத்தாற்

றுக்க நிவர்த்தி சுகப்ராப்தி மோகமே
யெக்காலு மில்லை யிதற்கு. (உகரு)

தேடிக் கிடைத்த திறனும் விடயத்தை
நாடி மனமதுவு கண்ணும்பேர-தோடு
மகநிச் சலமா யகப்படலா னன்ம
சுகமதனிற் றோன்றுமெதிர் சூழ்ந்து. (உகசா)

விடயமதி னெங்கும் விளங்கிடு நலான்மாத்
தடையறுமா னந்தமது, தானே-விடயமதி
னுண்டோ சுகமென்ப தோதவிறை யெங்கெனினு
முண்டே லுனையன்றி யோது. (உகஎ)

(விடயங்கடோறுமாத்மானந்தமே
அநுபவிக்கப்படுமெனல்.)

ஆன்மாவி னுற்ற வருஞ்சுகத்தைக் கண்டோரு
மான்மாவிற் கன்னியத்தி லானந்தஞ்-சேண்பாரி
னுண்டென் றிசைக்க வொருப்படுவ தண்டோமற்
றண்டர்க்கு மாகா தது. (உகஅ)

(ஈசுவராதியர்க்குஞ்சுவாத்மானந்தமே முக்கியமெனல்.)

அரியும் பிரமனரனுரு மெவ்வுலகுந்
தெரியுமா யோகிற் செறித-லரிதாயினுற்

றென்று மிதுவென் றிருந்தனையே மாணுநீ
யுன்று வறிந்தி யுளம். (உகக)

(ஆத்மவகையின் தாரதம்மியமுரைத்தல்.)

பணமே வெகுபிரியம் பண்பார் மிதினுங்
குணமிக்க மைந்தனிதிற் கோதி-லுணுமிக்க
வாக்கையிதி னும்பொறிக ளாங்கரண மித்தினுமே
தாக்குமுயி ரித்தினறி சாட்சி. (உஉ0)

(ஆத்மார்த்தம்.)

சாட்சியே தற்பிரமந் தற்பிரம மேசாட்சி
சாட்சிமுதன் மூன்றுங் கடந்தக்கால்-சூட்சி
யதுவே யறிவுண்மை யானந்த மாகு
மதையன்றி யில்லை யயல். (உஉக)

(தாதான்மியம்.)

விண்ணென்றே மேவும் விவிதமா யீங்கிதுபோ
லெண்ணும் பிரமமதே யெப்பொருளும்-பண்ணுரு
மாமாயை தன்னின் மகத்துவமே யீதறியி [வ
னுமாயை மோக மறும். (உஉஉ)

புத்தி விருட்சத்திற் போந்தவிரு பட்சிகளா
மத்திறென்று கூடத்த னுகுமே-மத்தொன்று

சீவன் விடயமுணுந் தேடியறி கூடத்தன்
மேவு மிதைவிளக்கு மேல். (உஉரு)

(மாயையவித்தைகளிறுபாஸதாதான்மியம்.)

தொம்பதத்தி லாபாசந் தொஷ்கருமஞ் செய்துண்ணு
மம்பலங்க டற்பதத்தி ஞபாசஞ்-செம்பலங்க
ளீயு மிரண்டினுமா மேற்றவதிட் டானங்க
ளேயுமிரண் டாதலிலே யெண். (௩உச)

(ஞானமியார்க்கெனச்சீடன்வினுதல்.)

கூடத்த ஞபாசங் கூடியது சீவனெனப்
பாடத்தின் முன்னம் படித்துற்றே-ஞடுமெனக்
கையனே யான்பிரம மானே னெனுமறிவிங்
கையமற வார்க்கோ வறை. (உஉ௬)

(அஃதாபாசனுக்கேயெனல்.)

தானே யசங்கநிறை சச்சிதா னந்தவதிட்
டான வகண்ட வறிவாகு-மானமுறுஞ்
சாட்சியெனுங் கூடத்தன் சர்வம் பிரமமதா
லாட்சியுறு மாபாசற் காம். (உஉரு)

ஆபாசற் கேழவத்தை யாகுமதி னென்றிதுவா
மாபாசற் காகு மவத்தைகளை-நீபாரா

யஞ்ஞான மாவரண மாகும் பிராந்தியோ
டெஞ்சும் பரோட்ச மினும். (உஉஎ)

தானே யதுவாத் தழைத்தவப ரோட்சமோ
டானவத னாற்சோக பற்றிடவு-மோனமுறுஞ்
சொல்லா வதியர்ஷஞ் சொற்றவிவை யேழவத்தை
வல்லாயா பாசற்கா மற்று. (உஉஅ)

(சீடன்சங்கைசமாதானங்கள்.)

பிரமத்திற் கன்னியமாப் பேறறுமா பாசன்
பிரமநா னென்றறிந்து பேசுந்-தாமாகு
ஞானமது பொய்யாமே நாட்டிமதென் னென்பாயே
லானவகை யாமதனை யாய். (உஉகூ)

(சமாதானம்.)

நானென்ப தொன்று நலமிருகூ டத்தனையாம்
நானென்ப தாபாச நாட்டமுமாம்-நானென்
றிருவகையு மைக்கியமே யேற்குமதுண் டாமா
லிருவகையு மத்துவித மே. (உ௩ய)

முக்கியமும் வாதை மொழியு மதிகாரணம்
முக்கியமே வாதையல முக்கியமாம்-தொக்குஞ்

சமானா திகரணமே சாற்றிடினும் வாதை
சமாதிதனி னைக்யமெனுந் தான். (௨௫௧)

(பாதசமானாதிகரணம்.)

கடங்கடொரு முற்ற கதிர்மதியின் சாயை
கடமுறுநீர்க் காய்ந்தற்றே காணும்-விடலறுமேல்
விம்பத்தை யுற்று மேவுமீதி னைக்கியமே
விம்பரிலை யென்னு மிது. (௨௫௨)

சமாதி நிலையிற் சலிப்புறவே தேக
மமையும் பொறிகரண மற்றே-யிமையாம
லெல்லும் பகலு மனவரதம் வாதைபுறப்
புல்லுமதா னைக்யமெனும் போந்து. (௨௫௩)

(முக்கியசமானாதிகரணம்.)

கடமதனி னாகாயங் காணுமகா காயத்
திடமருவி யேகமதா மித்திற்-சடவறினை
நீத்திங் கறிவாய் நினையாமற் பந்தமுத்தி
பாத்திருத்தல் முக்கியத்தின் பண்பு. (௨௫௪)

ஆபாசம் விம்பத்திற் கன்னியமாப் பின்னமல
வாபாச மாகா தசத்தியமும்-நீபாரா

வாடிதனைக் கண்டே யகத்திற் றிரும்பிமுக
நாடியதா பாசனயம். (உகறு)

ஆடிதனிற் காணுமுகத் தாபாச மாணவகா
வாடிதனி னின்றுன்ற னகத்தே-கூடியதைக்
காணவெளிப் போந்தவிரு கண்ணின் விருத்திசுழற்
பாணத்திற் பார்க்குமதிற் பார். (உகசு)

விம்பத்தி னபாச வேற்றுமையின் றன்மமதூஉம்
விம்பமதவ் வாடிதனின் மேவுறலும்-விம்பத்
தெதிர்முகத்திற் காண்பதூஉ மிம்மூன்றின் ஞான
மிதுபேத ப்ராந்தியென வெண் (உகஎ)

ஈண்டித் தருமமெலா மித்தையென வாதிக்கி
னண்டே யபேதமுற வைக்கியமாங்-காண்டக்க
சிவேச ரிப்படியே சித்தா யபேதமதா
மாவேச மில்லா தவர்க்கு (உகஅ)

(ஞானிகளின் கன்மங்களை முன்னிட்டுச்
சீடன்சங்கை.)

ஞானியரைக் கன்ம நலியா விதமருள்வீ
ரான வவர்தாமு மஞ்ஞர்கள்போன்-மானமிகு

நல்வினையுந் தீவினையு நாடிச் செயல்கண்டு
மில்லையவர்க் கேன்பிறவி யிங்கு. (உ௩௯)

கன்மங்கள் சஞ்சிதமா காமிபிரா ரத்தமென
சன்மமிகு சாத்திரங்கள் சாற்றும்மால்-நன்மகனே
கீழ்ப்போம் பிறவி களரா யிரத்துற்ற
பாழ்த்தவினை சஞ்சிதமாய் பார். (உ௪0)

சஞ்சிதமா கத்திரண்ட சார்பா மிருவினையி
லெஞ்சலுறு தொன்றுபழுத் தித்தநுவில்-விஞ்சுமது
காமியமுண் பிராரத்த கன்மமிதிற் செய்வினையா
காமியமா மென்றேநீ காண். (உ௪௧)

அவித்தைதனின் முன்பென்றே வாச்சிரித மாகிப்
பவித்திடுமிச் சஞ்சிதமும் பார்க்கி-னவத்தையுறு
மாவரண நீங்கி யவித்தையுடல் ஞானத்தீ
மேவினழற் பஞ்சாய் விடும். (உ௪உ)

(பிராரத்தம்புசித்தேதருமெனல்.)

பிரார்த்த மேகும் பிணங்கா தநுபவித்து
பிராரத்த ஞானி பிழைப்புதில்-பிராரத்த
முத்தமமே மத்திமமே வோரினத மாதமமே
யெத்தைப் புசிக்கினவர்க் கென். (உ௪௩)

(ஞானிகட்காகாமியநீங்குமாறு.)

அவித்தையுட னீருகி யாகுமய ஞெனென்
னவத்தை யகமமதை யற்றே-சவத்துடலே
நீக்காளை யாகாமி நேராப் பழிபூசை
யாத்தா ரவர்பால தாம். (உசச)

ஞானநலம் பாராட்டி நல்லோ ருபசரித்து
வானவவர்புண்ணியத்தையாங்கடைவர்-ஊனமுறுங்
கன்மத்தை நாடிக் கருத்தழிந்து நிந்திப்போர்
வன்பவத்தை யேற்றெழிவர் மற்று. (உசரு)

வீாசாம கோசரமாய் வாழும் பெரியோரைக்
கூசாம னிந்தைசெயுங் கூளரொளம்-பாசமிகுங்
கன்மத் திழிந்து களைகாணுச் சம்சார
தன்மத் தலைவார் தடித்து. (உசசு)

(பிராந்தியேசம்சாரமெனல்.)

சம்சார மேதென்னிற் சாற்றக்கேள் பிராந்தியதே
சம்சார மற்றென்றுந் தானல்ல-சம்சாரந்
தத்துவத்தைக் காணிற் றரியா திருளொளிமுன்
னெத்துணையு நேரா தென. (உசஎ)

(அநுபூதிமகிமை.)

செவ்விதனி லோர்காலே சித்தின் நெறிவறிந்தோ
ரெவ்விதத்தின் மேவிடினு மின்பமெரோ-யவ்வியமா
மாத்தா னவத்தைதயினை மாயாரு புரியினையு
நீத்தார்க்கு நிட்டையுண்டோ நேதி. (உசஅ)

(ஆத்துமஞானிகளல்லாதாரிழிவு.)

சும்மா விருக்குநிலை சொல்லறவே காண்பறியா
திம்மாயா யோகமிக வெய்துகினுந்-தம்மறியார்
கண்டநிலை யெல்லாங் கலகமறுப் பொய்ந்நிலையென்
றண்டம் பிளக்க வறை. (உசகூ)

(ஆத்துமஞானமே சமாதியாநடமேனல்.)

சும்மா விருப்பினுமேற் றன்பமிகு மில்லறத்தி
னிம்மாயா போகமிக வெய்துகினுந்-தம்மறிவார்
கொண்டநிலை யெல்லாமுங் கோதிற் சமாதியென
வெண்டிசையும் போற்ற விசை. (உருய)

தத்துவோபதேசவெண்பா முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| க | ௪௫ | விருமாப்பு | விஜமாப்பு |
| ௪௭ | ௨ | ளவா முன் | ளவண் முன் |
| ௪௫ | ௭ | த்து மா | த்துவமா |
| ௰௪ | ௧௰ | யாள்டேவ | யாடேவே |
| ௪௰ | ௭ | டற்றேற | டற்றேற |
| ௫௰ | ௧௯ | மெனை | மெனை |
| ௨௪ | ௯ | ராகு | ஞூ |
| ௰௪ | ௧௱ | கமபி | கமமீ |
| ௨௰ | ௧௰ | ளைடிபோ ர | ளைடிபேயர் |
| ௨௫ | ௧௧ | ணபந்தா | மைபந்தா |
| ௬௪ | ௭ | மணத்திற | மணத்திற |
| ௬௫ | ௧௧ | பிறக்தேன | மிறக்தேன் |
| ௭௰ | ௰ | துருபவ | பருவ |
| ௬௰ | ௪ | பகரிதாம் | பகரிதாம் |
| ௰௪ | ௧௪ | ஷை | ஷை |
| ௪௧ | ௫௫ | சுபாவி | சுபாய |
| ௪௬ | ௭ | மற | மற் |
| ௪௫ | ௨ | கெச்செசன் | கெசசெசன் |
| ௪௰ | ௧௯ | பிடபம | பிமயம் |
| ௪௮ | ௫ | லதுபே | லதுவே |
| ௭௨ | [illegible] | மாக்க | மக்த |

பிழைதிருத்தம்,

நாராயணசாமி
அன்பளிப்பு

உ

சிவமயம்.

ஆரியபோதாம்ருதம் என்னும்

# கருவூர்நொண்டிச்சிந்து.

## காப்பு-நேரிசைவெண்பா.

திருவா ரொருசிவமே தேர்ந்தருளிற் செப்புங்
கருவூர்நொண் டிச்சிந்தின் காப்பாம்-இருமையிலா
வைங்கரனுங் கந்த னரியரனு நான்மறையு
மெங்குருவு மெம்மறிவு மே.

## பிண்டோற்பத்தி.

பிரமா-புரிக்கரசா மெனையான்
றேடியறிந்தே கூடிமுன்
வரனுக்-தந்தையுனு மன்னம்
வளனுஞ் சுக்கில வடிவாக
வருவிலி-மதனம்பா லவனு
மூளமருண் டாயிழை யறிந்தவடன்

றிருமரு வகடதனிற்-றங்கிடத்
    திடன முற்றவண் டாயணமா
யொருமதி முதலாறு-மங்கே
    யொண்டொடி கருப்பினின் மன்னுமெனப்
தருமெழு தாதுநிறைந்-தாரிய
    சிறுகுடி லண்டப் பகுதியுற
வருமதி யேழுதனிற்-பிண்டத்
    தாருயிர் கூடிய நேரதனை
யொருவரு மறிவொண்ணாச்-சுழி திறந்
    தோடிய வாசிதனுடியடைந்
திடைகலை பிங்கலையா-யன்னை
    மாறிய ரேசக பூரகமே
யுடைகலை யெனையீர்த்தே-வெளியினி
    லோட்டியே யம்பர மாட்டியதே
எண்மதி கடிந்தொன்பான்-மதியமு
    மூட்டிய வன்னைத னுன்னிரதம்
நண்ணிடு மூந்தியினீ-ளை
    முறையினி னுண்டுயி ரண்டிடவே
தெவ்விடா கொண்டவனி-மண்டிய
    வைம்பெரு மாதுயர் கண்டிடவே
மிண்டிய பிரகுதன்-ஆர்த்திடு
    கண்டக தண்டனை விண்டிடவே

மதியம் பத்ததனிற்-காவென
விதிவழி யிதுவென மதிநுதலார்
சதியினி லெலையணைத்தே-பாங்குடன்
றூங்கிய கொங்கையி லோங்கினனே
தனனா தனதனனா. (க)

---

## திருமணப்பேறு.

ஒங்கிய தசதினமுற்-கழிந்திட
சூதக நீக்கியே சாதகமாஞ்
சாங்கிய விதியாற்றிச்-சாலவு
மீர்த்தெனைத் தீர்த்தனர் காத்திரமாய்ப்
பாத்திர மிவனுமென்-றன்னையு
நேத்திர மெனவே யாத்திரமாய்க்
கோத்திர விளக்கென்றே-யென்றனைச்
சூத்திர மாகவே சாத்திரங்கள்
பாலனை செய்கவெனப்-பள்ளியில்
பட்சமுட னுயர் லட்சணமாங்
காலமு மாய்ந்தொருநாள்-சுத்த
கணித தருக்க விலக்கணமுஞ்
சாலவறிந்தமகா-பண்டிதர்
சந்நிதி நன்னிதி வந்தனையோ

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

டேல மிகவு மளித்தே-யென்றனை
யேற்றிட வுள்ள மிகக்கனிவுற்
றரிஓ மெனவகத்தி-லன்புட
னைய வென்னக்கரு ளத்தனையுந்
தரித்தே னையாண்டில்-தாரணை
காரண முற்பவ தோரணையாற்
சுமதி வேமனனெளவை-சொற்றிடு
குமதியிலா வறமுறை பயின்றே
னேழாண் டினிலூண-பாடையு
மாய்ந்திட வுற்றனன் சாய்ந்தளவில்
சோராண் டிருபததிற்-சேர்த்திய
சுத்ததின மொரு மித்தவழி
மாதுலன் பொற்கொடியை-மணமுறை
மனமுவந் தேனெண மிகமகிழ்ந்தே
னிதுவே முத்தியென-ரதியினின்
மதுரித காணநா லறுபதுமே
சதுரமொ டுறுமுலகா-யதனென
நீடினனே மிக வாடினனே.

தனனு தனதனனு. (உ)

யெண்டிசை போற்ற வருந்-தெய்வ
நேசம தாந்திரு வாசகத்தைக்
கண்டேன் மெய்ம்மையுற-வன்றே
கருதிடு மென்னுள முறுதியதாய்க்
கொண்டேன் குணசாந்தம்-முற்றிய
கோதறுசாதனை நான்குடனே
யாதன முதலங்க-மாறு
சாதன யோக சமாதி முயன்
றுதா ரங்களையு-மடைவினின்
மூலமுத லாக் கிளையிறுவாட்
பிரணவப் பொருளான-கணபதி
பொற்புறு நற்பத மற்புதமா.
யண்டிய வாசி யற்ற-தணிபெறு
கண்டமதனி லசண்டமதாய்க்
குறியறிந் தாறுதலங்-கோயிலிற்
கும்பகத் தேறினன் றம்பமதில்
நூற்றுவர்க் கரசான-வாந்திர
வேட்டினி யென்றுள நாடிநடுக்
குண்டலி தனை முட்டிக்-கதிர்மதி
மண்டல மீறிய தண்டலையில்
விண்டலர் வன்னிநதி-பெருகிய
வாலமதின் மயிற்பால மறிந்
தாயிடை நெறி யயர்ந்தேன்-அம்மை
வாயிட பாகனை வாழ்த்திக்கொண்டேன்
தனனா தனதனனா. (௪)

## குருவருட்பேறு.

அருளொரு திருமேனி-கொண்டெனை
யஞ்சலென் றேயெதிர் தஞ்சமதாய்க்
குருவடி வாகியெதிர்ந்-தென்மனக்
கோதற வேயுளக் காதல்பெற
திருமல |போதமுற-வருமலப்
பேதமறவே யபேதமதாத்
திரிமல மையல்கெட-உடலக
மருவுறு போத வுபாதியறக்
குருமணி யெனை விழித்து-முறுவல்
திருமுக மண்டல மொளிதரவே
கரமதிற் றிருவெண்ணீ-றென்னுடைச்
சிரமதி னண்ணிய வுமதிலுங்
கறையறு நுதலிடத்துஞ்-சண்ணியே
மறைமுடி நிறைதரு மொருமொழியை
நறைகமழ் முகைமலர்வாய்-விண்டே
சிறைதெற வருளினன் முறைபெறவே
அடியிறு பனையதுபோ-லியானு
முடிமிசை யஞ்சலி கூப்பிகரம்
படிமிசை வீழ்ந்திறைஞ்சப்-பண்புறு
மையனு மெய்யெனைக் கைபிடித்தே
யெழுகென வெழுதாலு-நாமொழி
தழுதழுத்திடவுட லனன்மெழுகா

யுருகிட விருகண்கள்-பெருகியே
கடன்மடை யுடைந்தென வொழுகிடவே
திடமுறு முடன்முழுது-முரோமம்
பொடிகொள வானந்த முடிகொளவே
கடிமது குடியரெனச்-சந்ததங்
கொண்டிடு காமியுன் மத்தர்கள்போல்
நீடன மதுரவியலாய்ப்-பாடியு
மாடினன் பத்தர்க ணீடொலியில்
அன்னையின் திருக்கருணை-வாரியு
மாற்றினனே யெனைத் தேற்றினனே
தனனே தனதனனே. (௫)

---

## ஐயத்தகறல்.

தேரியே யுள்ள மதிற்-றேறிகன்
சந்திகி நின்றுள வையமதை
காரிய நான்முறையி-லடிமைக்
காதரவாக வகற்று கெனச்
சீரிய பாதமெனுஞ் - செய்ய
பங்கய மேற்றினேன் சங்கையிலாக்
காரிய காரணமுங் - கடந்துறு
பூரண முறைதரு பூரணமும்
நாரண னரன் பிரமர் - முதலாங்
காரணர் கைதொழு தாரகமும்

ஏது சாதன மறியாக் - கோதுறு
வாதரறியா வுயர் போதகமும்
இதுவிது வெனக் குழறுஞ் - சமயர்க்
கதுவது வாகி யத்தமதா
மெதுவது பிரமமெனை - வையனை
யதுவேது வென்றேன் பூதமுத
லிந்திய காணமல - வூன்றியு
மற்றுமியங்கு பிராணனல
வந்துறு சீவனல - வாய்த்திடு
வுந்திய வைங்கொரு கோசமல
சிந்திடு மூவவத்தை - சோங்கூறி
செப்பபி மானிகண் முறறுமல
வமபியன் மாயை யல - வளனுற
வாய்த்திடு மீசன மகேசனல
அலவல வென்றறியு - மகம்பத
வர்த்தம தாகு மிதார்த்த மதாம்
நீயது வாதுமென-வைய
னேதியெனு மறை நீதியதைப்
போதக மிகவார்த்தே - யென்னைய
போதக மாக்கினன் சோதனையில்
வாதனை மாய்ந் தறிவாஞ் - சீவன்
முத்த னெனவுய சித்தனென
வறிந்தே னதுவானேன். (௬)

## தீர்த்தயாத்திரை.

மங்கையர் பொன்புதல்வ-ரின்புறு
மற்றுள பற்றுக ளத்தனையுந்
தங்கிய வாதனையாம்-பொங்கிய
சங்கை குலைந்து துவண்டனவே
என்செய்த நற்றவமோ-இன்றெனின்
முன்ன ரிழைத்திடு முதிர்தவமோ,
அன்னை யளித்த துவா-மாசியின்
பின்ன ருதித்த பெரும்பயனோ
என்சொல நானறிவே-னீசன்
இன்புறு ஞானிகள் கண்படலோ
கொன்செயல் மாறறியாக்-கோதுறு
வன்செய லாகு மனத்தவனேற்
கென்செய லொன்றிலையா-யீடணை
காடணை வுற்றது நாடறிய
தீர்த்த யாத்திரை துணிந்தே-னவ்வயின்
மூர்த்தி தலங்கண் முயன்றகன்றேன்
ஆத்தர் தமைத்தொழுதே-னண்டிய
வத்தனை பேர்க்கு மெள்ளத்தனையே
மீத்தி மிகவு மளித்தேன்-விஞ்சிய
பஞ்சைக ளாயெனைக் கெஞ்சினரை

யஞ்சலென் ருதரித்தேன்-தஞ்சமாய்
வஞ்சனை யின்றியே கஞ்சியெனும்
செஞ்சொன் மிகவு மளித்தேன்-நெஞ்சினில்
கொஞ்சமுங் காமிய நஞ்சமிலை
பஞ்சமா பாதகமு-மஞ்சிடு
ரஞ்சித மான விதம்பெறமே
லும்பரு மறிவொண்ணு-வம்பர
நம்பர விம்ப சிதம்பரமே
கம்பொழி யம்பலத்தி-லின்புறு
தாண்டவனை நமதாண்டவனை
வம்பிழி மதமறியாச்-செம்பல
வம்பல வாணனை நம்பலனைக்
கண்டேன் கலிதீர்ந்தேன். (ரு)

---

## சாதனப்பேறு.

கண்டுழி யுள்ளமதி-லென்றனைக்
கண்டிலனே மதி விண்டிலனே
எண்டிசை காலமுதற்-புவிகெட
வேகியே தற்பத மாகியதே
நொண்டி நாடகங் கண்ட-போதினிற்
பண்டைவினைக உலைவிண்டிடுவேன்
றண்டரு மிகவேற்றுந்-தொண்டர்கள்
வண்டமிழ் மாமறை கண்டமுறை

## பிரமபட்டாபிஷேகம்.

நானது வாயினபின் - ஞாடு
வானமு தலுரு வானவெலாங்
கானலி னீரெனவுங் - கண்டிடு
கனவுல கென்னவு நனவதனி
லானவுலக முயிரும் - பாமுத
னற்றவ புண்ணிய பாவமுமே
ஈன வுடலு முளவா - மிந்திய
புந்தி பிராண ப்ரமாதிருவு
மாணவ மும்மலமு - மஞ்சிடு
வல்லுரு மாயை யவித்தைகளுங்
காணு முருவு மருவுங் - கற்றிடு
கால முதற்பரிச் சேதகமும்
நானென னீயெனலு - நட்புறு
மதுவிது வென்னலு நம்பும தாங்
கோனெனல் குருவெனலுங் - கும்பிடு
தம்பிரா னடிமையுஞ் செம்பலனும்
வம்பியன் முத்திகளும் - வலனுறு
செம்பியல் பந்தக பந்தியுமே
நம்புறு கலைகளுமே - நாடிய
விம்பரி லாகியசம்ப்ரமமும்
வந்தி புதல்வனென - வானதில்
சிந்து கயங்கள் சிறப்பெனவாய்

அன்பளிப்பு

வஞ்சனை போயினவென் - றார்த்திடு
மார்த்தருளை மிக சிந்தையுற
பந்தமும் வீடெனுமப் - பான்மைக
ளொந்த விதத்து மியம்பரிதாஞ்
சுந்தர ஞானமதிற் - சொற்பெறு
தொந்த மகன்று தொலைந்தனவே
திரமாம் பரமான்ம - வைக்கிய
வுரமா மிரண்டற முணர்வாகிப்
பிரம புரிக்கரசாம்-பட்டம்
எட்டிக்கொண்டேன் மிகக்கட்டிக்கொண்டேனே
தனனு தனதனனு. (எ)

கருவூர் நொண்டிச்சிந்து-முற்றிற்று.

## வாழி.

வாழ்க வந்தணர் மாமறை யாகமம்
வாழ்க மும்மத மன்ன ரரயனும்
வாழ்க பத்தர் வளம்பெரு முத்திரும்
வாழ்க வானகம் வையகம் வாழ்கவே.